Chapter XXIII Code of Criminal Procedure

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

**C.C No.**215/2019

Deposition of Witness **PW**3

| | | | |
|---|---|---|---|
| Name | : **கொமாரசாமி** | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.05.2025

**சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.**

**2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி இன்று ஆஜர் இல்லை. குவிமுச 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கெம்பநாயக்கன்பாளையத்தில் குடியிருந்து கொண்டு அம்மன் மெஸ் என்ற பெயரில் கடை நடத்தி வருகிறேன். பெருமாள், நரிக்கண்ணன் ஆகியோர் எங்களது கடைக்கு அடிக்கடி வருவார்கள். 6 மாதமாக கடைக்கு சாப்பிட வரும் வகையில் எனக்கு பழக்கம். எனது தங்கை மகன் எங்கள் ஊரில் உள்ள அரசு மருத்துவமனையில் வேலைக்கு தற்காலிகமாக சென்று வந்தார். எனது தங்கை மகனை அவர் ஏற்கனவே வேலை செய்யும் அரசு மருத்துவமனையில் பணிக்கு நிரந்தரமாக சேர்த்துவிடுவதாக சொன்னார். அதற்கு பெருமாள் ரூ.2,00,000/-ம் பணம் கேட்டார், நரிக்கண்ணன் முதலமைச்சரிடம் பி.ஏவாக இருப்பதாக சொன்னார். நான் அவ்வளவு பணம் இல்லை என்று கூறினேன். நரிக்கண்ணன் கொஞ்சம், கொஞ்சமாக பணம் கொடுக்குமாறு கேட்டார். நானும் அதற்கு ஒப்புக்கொண்டு 2011ம் ஆண்டு 4 தவணையாக முதலில் ரூ.15,000/-மும், 2வதாக ரூ.35,000/-மும், 3வதாக ரூ.30,000/-மும், கடைசியாக ரூ.30,000/-ம் பெருமாளிடம் கொடுத்தேன். கடைசியாக கொடுத்த

ரூ.30,000/-த்தை கடம்பூரில் உள்ள எனது அத்தையிடம் வாங்கி கொடுத்தேன். அதன்பிறகு ஒரு வருடமாக மேற்படி இருவரும் வரவில்லை. நான் பணம் கொடுத்த நபர்களை பார்த்தால் அடையாளம் தெரியுமா என்றால் எதிரி பெருமாள் நீதிமன்றத்தில் உள்ளதாக அடையாளம் காட்டினார். மற்றொரு நபர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அதன்பிறகு 2012ம் ஆண்டு எஸ்.பி அலுவலகத்திற்கு என்னை அழைத்து சென்றார்கள் அங்கு எழுத்து மூலமாக புகார் எதுவும் கொடுத்தேனா என்று எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகளின் ஊர் விபரம் எனக்கு தெரியாது. சாப்பிட வந்த வகையில் தான் எனக்கு தெரியும். எதிரிகளின் அடையாளம், அவர்கள் எங்கு என்ன தொழில் செய்கிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. என்னை வேறு ஒரு நபர் எஸ்.பி. அலுவலகத்திற்கு அழைத்து சென்று அங்கு புகார் கொடுத்தேன். அந்த புகாரில் எதிரிகளின் முகவரி குறிப்பிட்டு இருந்ததா, இல்லையா என்று எனக்கு தெரியாது. பொதுவாக ஒருவருக்கு நரிக்கண்ணன் என பெயர் வைக்கமாட்டார்கள் என்றால் அவ்வாறு கூப்பிடுவார்கள் ஆனால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அக்கா மகன் தினக்கூலி வேலைக்கு தான் அரசு மருத்துவமனைக்கு பணிக்கு சென்று வந்தார். அப்போது அவர் 10ம் வகுப்பு படித்திருந்தார். அப்போது அவருக்கு வயது 15, 16 இருக்கும். 4 தவணைகளாக நான் பணம் கொடுத்தபோது என்னிடம் அந்த பணம் இருந்ததற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரிகளுக்கு பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. போலீசார் வழக்கு பதிவு செய்யும் போது சாட்சிகள் அதிகமாக இருக்கவேண்டி என்னை இந்த வழக்கில் கூடுதல் சாட்சியாக சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல. அதனால் தான் எதிரிகளை பற்றி எந்த விபரமும் தெரியவில்லை என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இனங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Chapter XXIII Code of Criminal Procedure

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

**C.C No**.215/2019

Deposition of Witness **PW**4

| | | | |
|---|---|---|---|
| Name | : **சண்முகம்** | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions

of Act X of 1873 of the day of 29.05.2025

**சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.**

**2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி இன்று ஆஜர் இல்லை. குவிமுச 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

நான் கரூர் வடிவேல் நகரில் குடியிருந்து கொண்டு துப்புறவு பணியாளராக வேலை செய்து வருகிறேன். 2012ம் ஆண்டு ஹரிகிருஷ்ணன் என்பவரிடம் வேலைக்காக இரண்டுமுறை தலா ரூ.30,000/-ம் கொடுத்தேன். ஒரு ரூ.30,000/-ஐ சென்னையில் வைத்து ஹரிகிருஷ்ணனிடம் கொடுத்தேன். ஹரிகிருஷ்ணன் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கிறார். மேற்படி தொகையை எனது மகனின் வேலைக்காக வீரகோபால் என்பவர் மூலமாக சென்னை சென்று ஹரிகிருஷ்ணனிடம் கொடுத்தேன். நான் பணம் கொடுக்கமாட்டேன் என்று சொல்லியும், அவர்கள் வேலை வாங்கி தருவதாகவும், பணம் கொடுக்குமாறும் கேட்டார்கள். எதிரி ஹரிகிருஷ்ணன் தன்னை முதலமைச்சர் பி.ஏ என கூறினார். என்னிடம் ஹரிகிருஷ்ணனும், வீரகோபால் என்வரும் சேர்ந்து ஒரு G.O.வை காண்பித்தார்கள். மற்றொரு ரூ.30,000/-ஐ வீரகோபால் மற்றும் எதிரி ஹரிகிருஷ்ணனிடம் கொடுத்தேன். அவர்கள் என்னிடம் ரூ.1,00,000/-ம் கேட்டார்கள். எங்கள் ஊர்காரர்கள் சிலம்பரசன் மற்றும் அருங்கம்பாளையத்தை சேர்ந்த கோபால் ஆகியோரும் என்னுடன்

பணம் செலுத்துவதற்காக வந்தனர். அவர்கள் பணம் செலுத்தினார்களா என்றால் செலுத்தினார்கள் ஆனால் நான் பார்க்கவில்லை. எனது மகனுக்கு வேலை கிடைக்கவில்லை. ஒரு வருடம் வரை என் மகனுக்கு வேலை கிடைக்கவில்லை. அதனால் நான் வீரகோபாலிடம் பணத்தை திருப்பி கொடுக்குமாறு கேட்டதற்கு ஹரிகிருஷ்ணனிடம் வாங்கி கொள்ளுமாறு சொன்னார். அதன்பிறகு எதிரி ஹரிகிருஷ்ணனை பார்க்கவே முடியவில்லை. அதன்பிறகு எஸ்.பி அவர்களுக்கு என்னுடன் 2,3 பேர் சேர்ந்து புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சென்னையில் ஒரு லாட்ஜில் வைத்து முதல் பணத்தை கொடுத்தேன். அந்த லாட்ஜ் எங்கு உள்ளது என்று எனக்கு தெரியும், ஆனால் பெயர் தெரியாது. எம்.எல்.ஏ ஆபிஸ் இருக்கிற பகுதியாகும். நான் படிக்காததால் எதிரிகள் காட்டியதாக சொல்லப்படும் G.O.குறித்து எனக்கு தெரியாது. இரண்டாவதாக கொடுத்த ரூ.30,000/-ஐ ஈரோடு பஸ் ஸ்டாண்டில் வைத்து கொடுத்தேன். எந்த இடத்தில் வைத்து கொடுத்தேன் என்று ஞாபகமில்லை. இந்த வழக்கில் எத்தனை பேர் என்னை ஏமாற்றினார்கள் என்றால் 4 பேர் ஏமாற்றியதாக புகார் கொடுத்தேன். சாட்சி மீண்டும் ஹரிகிருஷ்ணன் மற்றும் வீரகோபால் ஆகியோர் ஏமாற்றிதாக சாட்சியம் அளித்துள்ளார். ஹரிகிருஷ்ணனும், வீரகோபாலும் ஏமாற்றயிதாக தான் எஸ்.பி அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். எஸ்.பி. அலுவலகத்தில் கொடுத்த புகாரில் எதிரிகளின் பெயர், முகவரி எழுதியிருந்ததா என்று எனக்கு தெரியாது. எதிரிகள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்றால் வீரகோபாலின் ஊர் எனக்கு தெரியும், தற்போது ஞாபகமில்லை, அவர் எனது உறவினர். ஹரிகிருஷ்ணனின் ஊர் எனக்கு தெரியாது. தற்போது வரை நான் அளித்த புகாரில் உள்ள விபரம் எனக்கு தெரியாது. போலீசார் எனக்கு படித்து காண்பித்தார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. வழக்கின் விசாரணைக்கு வரசொல்லி நேற்று முன்தினம் தகவல் சொன்னார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரிகளுக்கு பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. போலீசார் வழக்கு பதிவு செய்யும் போது சாட்சிகள் அதிகமாக

இருக்கவேண்டி என்னை இந்த வழக்கில் கூடுதல் சாட்சியாக சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல. அதனால் தான் எதிரிகளை பற்றி எந்த விபரமும் தெரியவில்லை என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இனங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Chapter XXIII Code of Criminal Procedure

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

**C.C No.**215/2019

Deposition of Witness **PW**5

| | | | |
|---|---|---|---|
| Name | : **சிலம்பரசன்** | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions

of Act X of 1873 of the day of 29.05.2025

**சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.**

**2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி இன்று ஆஜர் இல்லை. குவிமுச 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

நான் கரூர் மாவட்டத்தில் வடிவேல் நகரில் குடியிருந்து கொண்டு டெக்ஸ்டைலில் வேலை செய்து வருகிறேன். கோபால் என்பவர் எனக்கு உறவினர் ஆவார். 2010ம் ஆண்டு கோபால் என்பவர் சின்னியம்பாளையத்தை சேர்ந்த வீரகோபால் என்பவரை எனக்கு தெரியும் என்று அரச்சலூர் அழைத்து சென்று அங்கு வைத்து பெருமாள், வீரகோபால் ஆகியோர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். பெருமாள் என்பவர் எனக்கு அரசு வேலை வாங்கி தருவதாகவும், சென்னையில் உள்ள முதலமைச்சரின் பி.ஏ ஹரிபாபு என்கிற நரிகண்ணன் தனக்கு பழக்கம் என்று கூறி சென்னை சேப்பாக்கம் ஸ்டேடியம் அருகே உள்ள பிரைமார்க் லாட்ஜில் வைத்து பெருமாள் என்பவர் ஹரிபாபுவை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். மேற்படி ஹரிபாபு தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளதாக சாட்சி அடையாளம் காட்டினார். அப்போது ஹரிபாபு என்னிடம் அரசாங்க வேலை உறுதியாக வாங்கி தருவதாகவும், ரூ.1,00,000/-ம் வரை பணம் செலவாகும் என்றும் கூறி முன்பணமாக ரூ.30,000/-ம் கொடுக்குமாறு கேட்டார். கொஞ்ச நாள் கழித்து G.O. வந்த பிறகு பாக்கி தொகையை தருமாறு கூறினார். அதன்பிறகு

6 மாதம் கழித்து பெருமாள் என்பவர் எனக்கு போன் செய்து ஈரோடு பஸ் நிலையத்திற்கு வரசொன்னார். அங்கு சென்றபோது ஒரு G.O. போன்ற ஜெராக்ஸ் பேப்பரில் கையெழுத்து வாங்கிகொண்டு மீண்டும் ரூ.30,000/-ம் கேட்டதின் பேரில் கொடுத்தேன். கொஞ்ச நாள் கழித்து தபால் மூலமாக உங்களுக்கு ஆர்டர் வந்துவிடும் என்றும், ஆர்டர் வந்த பிறகு மீதி பணம் கொடுத்தால் போதும் என சொன்னார். அதை நம்பிக்கொண்டு நாங்களும் காத்திருந்தோம். அதன்பிறகு எந்த தகவலும் வரவில்லை. ஒரு வருடம் கழித்து பெருமாளை பார்த்து கேட்ட போது நான் அழைத்து கொண்டுதான் சென்றேன். ஹரிபாபு தான் பணத்தை வாங்கினார் அவரிடம் சென்று கேட்குமாறு சொன்னார். பெருமாள் அதன்பிறகு சரியாக பதில் சொல்லவில்லை. ஹரிபாபு சென்னையில் இருந்ததால் பெருமாள் மூலம் கேட்டோம். 2012ம் வருடம் ஈரோடு காவல் நிலையத்தில் இருந்து எனக்கு போன் செய்து தகவல் சொன்னார்கள். ஹரிபாபு என்கறி நரிக்கண்ணன் நிறைய பேருக்கு வேலை வாங்கி தருவதாக பணம் பெற்று மோசடி செய்ததாக சிவராமன் என்பவர் புகார் கொடுத்தது தொடர்பாக எங்களையும் காவல் நிலையத்திற்கு வர சொன்னார்கள். நீங்கள் பணம் எதுவும் கொடுத்துள்ளீர்களா என்று போலீசார் கேட்டார்கள். பணம் கொடுத்து நாங்களும் ஏமாந்துவிட்டதாகவும், நாங்களும் புகார் கொடுப்பதாக சொன்னதற்கு ஏற்கனவே புகார் கொடுத்திருப்பதாகவும், நாங்கள் சாட்சியாக இருந்தால் போதும் என்றும் போலீசார் சொன்னார்கள். அதன்பிறகு போலீசார் விசாரணை செய்து எங்களை அனுப்பி விட்டார்கள். நான் சென்னையிலும், ஈரோட்டிலும் பணம் கொடுக்கும்போது என்னுடன் சண்முகம், கோபால், வீரகோபால், பெருமாள், தனசேகர் ஆகியோர்கள் இருந்தார்கள். சண்முகம், என்பவர் தனது மகனின் வேலைக்கா ரூ.30,000/-மும், தனசேகர் என்பவர் ரூ.35,000/-மும் ஆகியோர் பணம் கொடுத்தனர். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு தற்போது வயது 39. நான் முதல் முறை பணம் கொடுத்த வரவு செலவு அனைத்தும் சென்னையில் தான் நடைபெற்றது

என்றால் சரிதான். நான் சென்னை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. போலீசார் கேட்டு கொண்டதற்கு இனங்க ஈரோடு பஸ் ஸ்டேண்டில் வைத்து பணம் கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்காலிகமாக கூலி வேலை செய்து வருகிறேன். இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ள நபர்கள் எனது வீட்டிற்கு அருகில் வசிக்கும் எனக்கு தெரிந்தவர்கள் ஆவார்கள். வழக்கு சம்பந்தமாக போலீசார் இன்று காலை குற்ற அறிக்கையை கொடுத்து படிக்க சொன்னதால் தான் இந்த வழக்கு பற்றிய முழு விபரமும் தெரியும் என்றால் சரியல்ல, நானும் இந்த வழக்கில் பாதிக்கப்பட்டவர் தான். போலீசார் விசாரணையில் இரண்டு முறை கொடுத்த ரூ.30,000/-ம் எந்த தேதியில் கொடுத்துள்ளேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வருடம் தான் சொல்லியுள்ளேன். G.O. என்னவென்று எனக்கு தெரியாது என்றால் அது Government Order அரசு வேலையை உறுதிபடுத்துவதற்கான உத்தரவு தான் G.O. ஆகும். அசல் G.O. எப்படி இருக்கும் என்ற விபரம் எனக்கு தெரியாது. பெருமாள் காட்டிய G.O.வை எனக்கு படித்து காட்டவில்லை, அதனால் அதில் என்ன உள்ளது என்று எனக்கு தெரியாது. அதன் நகல் மட்டும்தான் பார்த்தேன். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரிகளுக்கு பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. போலீசார் வழக்கு பதிவு செய்யும் போது சாட்சிகள் அதிகமாக இருக்கவேண்டி என்னை இந்த வழக்கில் கூடுதல் சாட்சியாக சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல. அதனால் தான் எதிரிகளை பற்றி எந்த விபரமும் தெரியவில்லை என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இனங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Chapter XXIII Code of Criminal Procedure

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

**C.C No.**215/2019

Deposition of Witness **PW**6

| | | | |
|---|---|---|---|
| Name | : **கோபால்** | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.05.2025

**சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.**

**2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி இன்று ஆஜர் இல்லை. குவிமுச 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

நான் கரூர் மாவட்டம் செம்மலர் நகரில் குடியிருந்து கொண்டு மருத்துவமனையில் வேலை செய்து வருகிறேன். நான் அருகம்பாளையத்தை சேர்ந்தவர், சின்னியம்பாளையத்தில் பெண் எடுத்துள்ளேன். அந்த ஊருக்கு சென்று வந்த வகையில் வீரகோபால் என்பவர் பழக்கம். அரசாங்க வேலை வாங்கி தருவற்கு தனக்கு ஆள் உள்ளதாகவும், அதனால் தெரிந்தவர்கள் யாராவது இருந்தால் சொல்லுமாறு வீரகோபால் கூறினார். நான் சிலம்பரசன், சண்முகம், தனசேகர் ஆகியோரை வீரகோபாலிடம் அழைத்து சென்றேன். வீரகோபால் ஈரோடு பஸ் ஸ்டேண்டிற்கு வருவமாறு கூறினார். நாங்கள் ஈரோடு பஸ் ஸ்டேண்டிற்கு அருகில் உள்ள ஹோட்டலுக்கு சென்று பெருமாள், ஹரிபாபு என்கிற நரிக்கண்ணன் மற்றும் வீரகோபாலை பார்த்தோம். நாங்கள் மூவரும் ஹரிபாபு என்பவரிடம் பணம் கொடுத்தோம். நான் பணம் எதுவும் கொடுக்கவில்லை. தனசேகரன், சிலம்பரசன், சண்முகம் ஆகியோர் தலா ரூ.35,000/-ஐ ஹரிபாபு என்பவரிடம் பணம் கொடுத்தார்கள். முதலில் வேலை தருவதாக கூறி ரூ.1,00,000/-ம் தொகை செலுத்துமாறு

பெருமாளும், வீரகோபாலும் சொன்னார்கள். பணம் கொடுத்த பிறகு எங்களை செல்லுமாறு கூறியுள்ளார்கள். மீண்டும் ஒரு G.O. வந்திருப்பதாக சொல்லி சென்னை சேப்பாக்கத்தில் உள்ள லாட்ஜிற்கு வர சொல்லி வீரகோபால், பெருமாள், ஹரிபாபு ஆகியோர் ரூ.30,000/-ம் கேட்டார்கள். நான் அவர்களை அழைத்துக்கொண்டு சென்று அங்கு வைத்து தனசேகரன், சிலம்பரசன், சண்முகம் ஆகியோர் தலா ரூ.30,000/-ஐ ஹரிபாபு என்பவரிடம் பணம் கொடுத்தார்கள். ஹரிபாபு ஒரு G.O. போன்று ஒரு சிறிய ஜெராக்ஸ் பேப்பரை காண்பித்தார். பின்பு அதை வாங்கி கொண்டு ஒரிஜினல் பேப்பரை தபாலில் அனுப்புவதாக சொன்னார். பிறகு நாங்கள் வந்துவிட்டோம். இரண்டு வருடம் பார்த்தோம் தகவல் எதுவும் வரவில்லை. வீரகோபாலை போய் பார்த்தோம். வீரகோபால் எங்களை பெருமாள் வீட்டிற்கு அழைத்து சென்றார். பெருமாளிடம் கேட்டபோது ஹரிபாபுவிடம் கேட்குமாறு சொன்னார். பிறகு நாங்கள் 4 பேரும் ஈரோடு மாவட்ட எஸ்.பி அலுவலகத்திற்கு வந்து புகார் கொடுக்க சென்றபோது ஏற்கனவே சிவராமன் என்பவர் புகார் கொடுத்துள்ளதால் அந்த வழக்கில் எங்களையும் சேர்த்து கொள்வதாக போலீசார் சொன்னார்கள். அதன்பிறகு காவல் நிலையத்தில் இருந்து விசாரணைக்கு எங்களை அழைத்தார்கள். அதன்பிறகு எதிரியை கண்டுபிடிக்க முடியவில்லை, கண்டு பிடித்த பிறகு அழைக்கிறோம் என்று சொல்லி அனுப்பி விட்டார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எனக்கு முன்பு சாட்சியம் அளித்துள்ள நபர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. அவர்கள் என்னை நம்பி தான் வருகிறோம் என்று சொன்னார்கள். முதல் தவணை தொகை ஈரோட்டில் வைத்து தான் கொடுத்தார்கள் என்றால் சரிதான். ஈரோடு பஸ் ஸ்டேண்டு அருகில் உள்ள ஹோட்டலில் வைத்து பணம் கொடுத்தோம், அவர் லாட்ஜில் இருந்தார். போலீசார் விசாரணையில் எந்த தேதியில் ஈரோடிலும், சென்னையிலும் பணம் கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு அரசு முத்திரை இடப்பட்டு அதன் கீழ் கையொப்பம் செய்திருந்தால் அது G.O. என்று எனக்கு தெரியும். G.O. என்பதற்கு அர்த்தம் எனக்கு தெரியாது. என்னுடன் வந்த

நபர்கள் எத்தனை ரூபாய் தாளை செலுத்தினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. எனக்கு முன்பு சாட்சியம் அளித்த சண்முகம் எனது உறவினர் மற்றவர்கள் சண்முகத்தின் வீட்டிற்கு அருகே உள்ளவர்கள். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரிகளுக்கு பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. போலீசார் வழக்கு பதிவு செய்யும் போது சாட்சிகள் அதிகமாக இருக்கவேண்டி என்னை இந்த வழக்கில் கூடுதல் சாட்சியாக சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல. அதனால் தான் எதிரிகளை பற்றி எந்த விபரமும் தெரியவில்லை என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இனங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**